**பன்னல பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 டிசெம்பர் 05 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ் அறிக்கையின் 1.3.4,1.3.6 பந்திகளில் விவரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பந்தி 2.3.2(அ) இன் மூலம் சுட்டிக் காட்டியவாறு பிழையினை சரி செய்வதற்காக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 99,908 தொகை ஒன்று கேள்வி மூலம் வாடகைக்கு கொடுத்தல் கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கழிவுப்பொருள் கட்டணம் (2-13) பில் போடப்பட்டவை ரூபா 206,164 தொகை எனினும், ரூபா 12,255 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் கழிவு பொருள் கட்டண வருமானம் ரூபா 193,909 இனால் குறைவாகவும் மற்றும் வருட இறுதியில் காணப்பட வேண்டிய ரூபா 25,169 வரவு மீதி ரூபா 168,740 இற்கான செலவு மீதி ஒன்றாக மாறியுள்ளது.

(இ) 2012 ஆண்டின் போது சுற்றாடல் வைப்புக்கள் திருப்பி செலுத்தும் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 126,875 இற்கான தொகை நாட்குறிப்பு இலக்கம் 64 மற்றும் 65 இன் மூலம் விஷேட அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் (5-36) மற்றும் பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்துதல் கட்டண

வருமானம் (5-41) கணக்குகளுக்கு செலவு வைத்துள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 253,750 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 3,494,504 இற்கான முத்திரைக் கட்டண வருமான மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2012 ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்ற ரூபா 982,285 இற்கான சம்பள மீளளிப்பு பெறுவனவுகள் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு, செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 945,806 இனை மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பொது வழங்கல்கள் கடன்கொடுத்தோர் ரூபா 105,198 குறைவாகவும் மற்றும் செலுத்த வேண்டிய கடன் வட்டிக்காக ஒதுக்குதல் கணக்கு அதே தொகையால் மிகையாக காணப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான ஆசிய அபிவிருத்தி கடன் தொடர்பாக செலுத்திய வட்டி செலவு ரூபா 1,300,165 தொகையாக மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் பிரயாணச் செலவு, பெறுமதி கூடியவரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, மற்றும் முத்திரை வரி முறையே ரூபா 1,094,375 உம், ரூபா 596,666 உம், ரூபா 101,001 உம் மற்றும் ரூபா 78,300 மிகையாவும் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 1,870,342 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) சம்பளங்கள் மற்றும் படிகள் செலவு ரூபா 63,527 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் சம்பள மீளளிப்பு வருமானம் ரூபா 109,726 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது கடை வாடகை தொடர்பாக முற் கொடுப்பனவுத் தொகை என ரூபா 2,224,901 ஆண்டிற்கான வருமானத்திற்கு எடுத்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு தொடர்பாக மூலதன செலவுகள் (309) இன் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 34,443,756 தொகை ஒன்று நாட்குறிப்பு 84 இன் மூலம் மூலதன சொத்துக்கள் திருத்தமும் பராமரிப்பு செலவும் (304) மீண்டுவரும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மூலதனச் சொத்துக்கள் திருத்தமும் பராமரிப்பும் செலவு அதே தொகையில் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், மூலதனச் செலவுகள் அதே தொகையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 10 வருமானத் தலைப்புகள் தொடர்பாக 2011 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதிக் கணக்குகளின் பிரகாரம் மற்றும் வருமானப் பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 9,987,147 இற்கான வித்தியாசத்தை பதிவழிப்பதற்காக மீளாய்வாண்டின் போது இலக்கம் 12 முதல் 21 வரை நாட்குறிப்புகளின் மூலம் திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்து குறிப்பிட்ட வருமான பேரேட்டு கணக்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 9,987,146 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்களுக்காக உள்ளூராட்சி ஓய்வூதிய

நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையினை முறைப்படி செலுத்தாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந்த நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 4,200,774 ஆகும்.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக பில் போடப்பட்டவை மற்றும் இறுதி மீதியின் கீழ் 22 கணக்கு விடயங்கள் தொடர்பாக மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதிகளிடையே ரூபா 31,580,825 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது

1.3.4 தொங்கல் கணக்குகள்

------------------------------------

2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு தொங்கல் தன்மையுள்ள கணக்குகளின் செலவு மீதி என ரூபா 73,766 தொகை காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு இலக்கம் 102 இன் மூலம் அதனை திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகினறன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 126,950,367 ஆக காணப்பட்டதுடன் அதற்காக காலப் பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 101,203,572 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 8,053,839 தொகைக்காக காலப்பகுப்பாய்வு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 147,486,468 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் பற்றி விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 326,037 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,155,518 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,829,481 இற்கான வீழ்ச்சி காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 55,126,338 இற்கான மூலதன உதவி

மற்றும் ரூபா 23,232,394 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 32,219,981 வரை அதிகரித்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 129,397,018 இல் நூற்றிற்கு 66 ஆகிய ரூபா 85,291,078 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 55,126,338 இற்கான முழுத்தொகையும் வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை அடக்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 129,070,981 இல் நூற்றிற்கு 34 ஆகிய ரூபா 43,508,302 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 61 ஆக ரூபா 26,536,317 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவாகிய ரூபா 22,232,394 இல் நூற்றிற்கு 30 ஆகிய ரூபா 7,025,024 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதி நூற்றிற்கு 70 ஆகிய ரூபா 16,207,370 தொகை கமநெகும, மகநெகும, வயம்ப புபுதுவ ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், கடை வாடகை, குத்தகை ஆகிய வருமான வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும் சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானம் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 3,006,576 காணப்பட்டதுடன், வருடாந்த பில் போடப்பட்டவை ரூபா 3,947,631 ஆகும். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் நிலுவை பட்டியல் தயாரித்து, குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் ஆதனங்களை தடை செய்து நிலுவை வீதவரி அறவீடு செய்யும் செயற்பாடுகளை அமுல் நடத்தியிருக்கவில்லை.

2.3.3 குத்தகை

-------------

2013 ஆண்டிற்கான குத்தகைக்கு கொடுத்திருந்த 02 சொத்து விடயங்கள் தொடர்பாக ரூபா 27,721 இற்கான நிலுவை ஒன்றும் மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 154,999 இற்கான நிலுவை ஒன்றும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்டது.

2.3.4 கடை வாடகை

-----------------------

கடைகள் தொடர்பாக பல வருட காலமாக காணப்படும் மாதாந்த தவணைப் பணம் 28 – 71 இடையே வீச்சில் ரூபா 189,178 நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. அதே போல் வேறு 20 கடைகள் தொடர்பாக ரூபா 427,674 நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

2.3.5 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழிலின் மற்றும் வியாபாரங்கள் பற்றி பட்டியல் ஒன்று தயாரித்து செயலாளருக்கு சமர்பித்திருந்த போதும், சபையினால் விதிக்கட்ட வரியை கைத்தொழிலாளரின் மற்றும் வியாபாரிகளால் 07 நாட்களில் செலுத்தும்படி அறிவித்தல் வழங்கியிருக்கவில்லை. அதே போல் அனுமதிப்பத்திரம் பெறாதவர்களை இனங்கண்டு அதனை அறிவித்தல் அல்லது குறிப்பிட்ட விதியின் பிரகாரம் செயற்படுத்தல் ஒன்றும் நடைபெற்றிருக்கவில்லை.

2.3.6 முன் கொடுப்பனவு பணம்

----------------------------------------

24 கடைகளை கொண்ட வடகெய்யாவ கடைத்தொடர் கட்டடத்தின் 05 மற்றும் 08 இலக்க கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 255,294 இற்கான முற்கொடுப்பனவுத் தொகை நிலுவையாகக் காணப்பட்டது. 6 கடைகள் தொடர்பாக வாடகையாளருடன் வாடகை தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்காமையால் 2008 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 909,100 இற்கான வாடகைத் தொகையினை சபை இழந்துள்ளது. 2011 திசெம்பர் 20 திகதி வரை ரூபா 7,204,172 தொகை செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வடகெயாவ கடைத்தொடர் கட்டடத்திற்கு நீர் மற்றும் மின்சார வசதிகள் பெற்றுக் கொள்ளல் மீளாய்வாண்டு இறுதி வரை நடைபெற்றிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2010-2012 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டட விண்ணப்பங்கள் 612 காணப்பட்ட போதும் 94 இணக்கச் சான்றிதழ்களே

வழங்கப்பட்டிருந்தன. 518 விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமை அல்லது கட்டட அனுமதிப்பத்திரத்தை காலத்தை நீடிக்காமை பற்றி சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அக்கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் சபையின் துணை விதியின் பிரகாரம் ரூபா 259,000 கட்டட இணக்கச் சான்றிதழ் வருமானமும், குறிப்பிட்டு கட்டடங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்து இல்லையெனில் அனுமதிப் பத்திரத்தின் காலத்தை வருடாந்தம் நீடிக்க கோரும் கட்டணம் ரூபா 588,000 வருமானமொன்று சபைக்கு உழைக்க கூடியதாக இருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நூலக அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 59,133,328 இற்கான கடன் மற்றும் அதற்கான வட்டி உரிய முறையில் செலுத்தாமையால் 2013 மூன்றாம் காலாண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக ரூபா 733,662 தண்டப்பணம் ஒன்று

சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2013 நான்காவது காலாண்டில் இருந்து கடன் தவணைப் பணம் செலுத்தாமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி தவணைப் பெறுமதி ரூபா 7,030,558 ஆக காணப்பட்டதுடன், அது தொடர்பாக தண்ட வட்டியும் செலுத்துவதற்கு நேரிடக் கூடிய இடர் ஒன்றும் காணப்பட்டது.

3.2 முறை சாரா கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------

மாகந்துர நூலகத்திற்காக தளபாடங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக அரச மரக் கூட்டுத்தாபன முகாமையாளர் (கல்தெமுல்ல தொடர் கட்டடம்) இன் இலக்கம் ரா.அ.ச/4/கல்.ஸங்/கூறுவிலை/xi) மற்றும் 2010 திசெம்பர் 18 திகதிய கடிதத்தின் பிரகாரம் 18 வரையான பண்டங்களின் கீழ் ரூபா 1,867,479 பெறுமதியான 173 பண்ட விடயங்கள் வழங்குவதற்காக மற்றும் மேற்கூறிய இலக்க மற்றும் 2011 ஜனவரி 05 கடிதத்தின் பிரகாரம் கட்டளையின் குறிப்பிடப்பட்டுள்ள விலையில் நூற்றிற்கு 15 கழிவு ஒன்று வழங்குவதற்கு இணங்கியிருந்தது. அதன் பிரகாரம் கழிவு பெறப்பட்டதா என அறியமுடியவில்லை. அத்துடன் கட்டளை தொடர்பாக ரூபா 1,269,885 செலுத்தப்பட்டிருந்த போதும் வழங்குவதற்கு இணங்கியிருந்த பண்டங்களில் 5 வகையான பண்டங்களின் கீழ் ரூபா 311,570 பெறுமதியான 19 பண்ட விடயங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை வழங்கியிருக்கவில்லை.

3.3 செயற்திட்டங்களை அமுல் நடத்துதல்

-------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய வங்கி கடன் உதவியின் கீழ் ரூபா 85,254,744 உம் மற்றும் சபை நிதியத்தில் இருந்து ரூபா 6,251,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த மாகந்துர நூலக மற்றும் சுகாதார நிலையம் உட்பட 25 கடைகளை கொண்டிருந்தன. அத்துடன் 2010 திசெம்பர் 22 திகதி குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனத்தினால் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வர்த்தக தொடர் கட்டடத்தில் காணப்பட்ட 25 கடைகளுக்காக 2012 ஆண்டின் போது 3 சந்தர்ப்பங்களில் மற்றும் 2013 ஆண்டில் 2 சந்தர்ப்பங்களில் முற்கொடுப்பனவு(கீமனி) அடிப்படையில் வழங்குவதற்காக கேள்வி கோரப்பட்ட போதும், குறைந்த விலை கூறல் ரூபா 39,063,000 இற்கான தரை மாடி 24 கடைகள் மற்றும் குறைந்த விலை கூறல் ரூபா 11,106,000 இற்கான மேல் மாடியில் விளையாட்டு மண்டபம் மீளாய்வாண்டு இறுதிவரை வாடகைக்கு கொடுக்க முடியாதிருந்தது. அதே போல் இந்த கடைகளை

கொடுக்க முடியாமையால் மாதாந்தம் ரூபா 126,500 இற்கான மதிப்பீட்டு வாடகையினை சபை இழந்துள்ளது. அதே போல் உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடனுக்காக மாதாந்தம் சுமார் ரூபா 1,368,000 கடன் மற்றும் கடன் வட்டி தவணை பணம் ஒன்றினை செலுத்த சபைக்கு நேரிட்டுள்ளது.

(ஆ) 2012 மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம் ரூபா 1,000,000 ஏற்பாடுகளின் கீழ் தகவல் தொழில் நுட்ப நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்காக கணனிகள், கணிகளுக்கான 12 மேசைகள் மற்றும் கதிரைகள்களுக்காக ரூபா 882,063 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய கணனி தகவல் தொழில் நுட்க நிலையம் மீளாய்வாண்டு இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 9 கணனித் தொகுதிகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. இக் கணனியின் துணைக் கருவிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 03 வருட உத்தரவாத காலமும் முடிவடைந்த நிலையில் காணப்பட்டது.

## 4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக பாதீட்டின் பிரகாரம் மீண்டுவரும் செலவுகளில் ரூபா 103,951,000 இற்கான ஏற்பாடுகள் காணப்பட்ட போதும் உள்ளவாறான செலவு ரூபா 127,771,000 ஆக இருந்தமையால் நூற்றில் 23 ஆகிய ரூபா 23,820,000 இனால் மிகைத்தல் ஒன்று காணப்பட்டது. அதே போல் மூலதன செலவுகளின் கீழ் ரூபா 106,011,000 இற்கான மதிப்பீடு ஒன்று காணபட்ட போதும் அவற்றில் நூற்றிற்கு 21 ஆகிய மதிப்பீடு ஒன்று காணப்பட்ட போதும் அவற்றில் நூற்றிற்கு 21 ஆகிய சுமார் ரூபா 22,504,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ரூபா 128,519,660 இற்கான மீண்டுவரும் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் நூற்றிற்கு 68 ஆகிய ரூபா 86,887,918 மாத்திரம் நெருங்கியிருந்தது. சபையினால் உருவாக்கிய வருமானத்தின் கீழ் மதிப்பீட்டு வருமானம் ரூபா 30,923,660 ஆக காணப்பட்டதுடன் அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 27,554,287 ஆகும்.

(இ) சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 2,150,000 பெறுமதியான 05 நலன்புரி விடயங்கள் மற்றும் ரூபா 231,687 இற்கான 04 அபிவிருத்தி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிருவாகம்